# விடியல்

**The Dawn**


இதழ்-112, ஆகஸ்டு -2018



**கௌரவ ஆசிரியர்**

**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**

கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**

**முனைவர் சி.ரா.சுரேஷ்**

தமிழ்த்துறைத்தலைவர்

**இணையாசிரியர்**

**முனைவர் ப.பிரதீபா**

தமிழ் உதவிப்பேராசிரியர்

**ஆசிரியர் குழு**

திருமதி. சு.சாந்தி
முனைவர் கோ.இரவிச்சந்திரன்
முனைவர் ந.சங்கீதா
திரு. செ.தங்கராஜ்
முனைவர் சு.முப்பிடாதி
திரு. ந.சரவணன்
திரு ஆ.கௌரிசங்கர்
திரு. சி.கிருஷ்ணமூர்த்தி
திரு. ரா.தர்மதுரை
செல்வி. மா.சத்தியப்பிரியா
திருமதி கொ.சத்தியா
திருமதி கா.வெண்ணிலா
முனைவர் மு.சுரேஷ்
திரு க.தனபால்
திருமதி ல.வெண்ணிலா
திரு.வி.சந்திரன்


## சுதந்திர தினம்

பாரத நாடு பழம் பெருமைகளை உடையது. இயற்கை வளங்களும் அறிவு வளங்களும் நிறைந்தது. பல சமயங்கள், பல மகான்கள் தோன்றிய நாடு. நல்வாழ்வு வாழ வழிகாட்டிய ஆன்றோர்களும் சான்றோர்களும் நிறைந்த நாடு. உலகத்திற்கே பொதுமறை வழங்கிய உன்னதமான நாடு.

இத்தகைய பெருமைகளைக் கொண்டிருந்தாலும் நமக்குள் ஒற்றுமை என்ற ஒன்று இல்லாத காரணத்தால் அந்நியரிடம் அடிமையானோம். நூற்றாண்டு அடிமைத்தனத்தை விரட்டியடிக்க சிந்திய இரத்தமும் மடிந்த உயிர்களும் கொஞ்சமல்ல.


© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)



வெளியீடு:

**தமிழ்த்துறை**

**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி**(தன்னாட்சி)
**திருச்செங்கோடு-637 215. தமிழ்நாடு, இந்தியா.**

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu

KSR COLLEGE OF ARTS AND SCIENCE
INDIA
Knowledge is Power



All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher

பொதுநலம் தேய்ந்து சுயநலம் தலையெடுக்கும்போது ஒற்றுமைக் கயிறு இற்று விழுகிறது. தனியொருவனுக்கு உணவில்லையெனில் உலகத்தை அழித்திடுவோம் என்றவன் நமது மகாகவி பாரதி. இந்த உணர்வு ஒவ்வொரு இந்தியனும் பெற்றிருக்க வேண்டியது அவசியம்.

நவீன காலங்களில் இயற்கை மட்டுமல்ல. இந்தியர்களின் மனங்களும் மாசடைந்து வருகின்றன. நாடுகளுக்கிடையே இருந்த பகைமை, வேற்றுமை உணர்வு சுயநலம் இன்று மாநிலங்களுக்கிடையேயும், மாவட்டங்களுக்கிடையேயும் ஏன் ஊர்களுக்கிடையேயும், தனிமனித மனங்களிலும் கூட துளிர்விட்டு வளர்ந்து வருகிறது. என் மாநிலம், என் மக்கள், என் ஜாதி, என் மதம், என் உறவு என்று மக்கள் மனம் கடுகு போல் சிறுத்து விட்டது.

தனிமனித சுதந்திரம் என்பதைத் தவறாகப் புரிந்து கொண்டதன் விளைவு நீர் மாசுபாடு, காற்று மாசுபாடு, வன அழிப்பு, நீர்நிலைகள் அழிப்பு, கனிம வளங்கள் கொள்ளை என அவரவர் நிலைக்கேற்ப சுதந்திரமாகச் சுரண்டுகிறார்கள்.

மக்கள் தலைவர்களும் மக்கள் பிரதிநிதிகளும் சட்டம் படித்தவர்களும் இன்று எதற்காக உழைக்கிறார்கள் என்பது யாருக்கும் புரியாத புதிராக உள்ளது. இதே நிலை நீடித்தால் மீண்டுமொரு சுதந்திரப் போராட்டத்திற்கு நாம் தயாராக இருக்க வேண்டும். மாறுகின்ற உலகில் மாற்றம் ஒன்றே மாறாதது. ஆனால் இம்மாற்றம் நன்மையை நோக்கிய, வளர்ச்சியை நோக்கிய மாற்றமாக இருப்பது மிகவும் முக்கியம்.

இன்று நாம் கலாச்சார வகையிலும், தனிமனித ஒழுக்கத்திலும் அரசியல் நிலையிலும் பண்பாட்டு நிலையிலும் நமது செயல்பாடுகளை சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய நிலையில் உள்ளோம். உலகம் சமநிலை பெற்றால்தான் வளர்ச்சி சாத்தியமாகும்.

இதற்கு நற்சிந்தனையுள்ள குழந்தைகள் பெருக வேண்டும். நல்ல குழந்தைகளே நல்ல மாணவர்களாக வளர்வார்கள். நல்ல மாணவர்களே நல்ல குடிமக்களாக உருவாக முடியும். நல்ல குடிமக்களாலேயே நல்ல தலைவர்களைத் தேர்ந்தெடுக்க முடியும். சுயநலம் ஒழித்த (காந்தி,காமராசர், கக்கன், அப்துல்கலாம் போன்ற) நல்ல தலைவர்களால்தான் நாடு வளர்ச்சி பெறும். நல்ல தலைவர்களை உருவாக்குவதும் அதன் வழி நாட்டு வளர்ச்சியை முன்னிறுத்திச் செயல்படுவதும் இன்றைய நிலையில் ஒவ்வொருவரின் கடமையாகும். இந்த சுதந்திர நாளில் சுயநலம் ஒழித்து பொதுநலம் காக்க உறுதியேற்போம். ஒன்றுபடுவோம்.

வாழ்க பாரதம்! வெல்க பாரதம்!

-ஆசிரியர்

சுதந்திர தினம்

கவிதைகள்…………………. ...5 - 23

கார்கில் வெற்றி தினம்………23 - 24

பொது அறிவு வினா- விடை…..24 - 26

விடுகதைகள்..…………………26 - 27

தமிழ்நாடு………….………..28 - 29

சிறுகதை………………………29 - 30

கவிதைகள்……………………30 - 32

# கவிதைகள்

## காலம்

எத்தனைத் துன்பங்கள்
நம் வாழ்வில்...
சில நேரம்
மகிழ்ச்சி
சிலநேரம்
துன்பம்
கண்ட காட்சியை
காலம் மாற்றும்...
கனவுக் காட்சி
நாம் மாற்றும் காலம்...

மு.உமாராணி
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## தன்னம்பிக்கை

விழுவது ஒன்றும் தோல்வியல்ல
எல்லாமே விழுந்தாக வேண்டும்...
விழுந்து எழாமல்
இருப்பதே தவறு!
அப்படியே விழுந்தாலும்
காய்ந்து விழும்

சருகைப் போல இருக்கவேண்டும்...
விழுந்தாலுமே பிறருக்கு
உதவுவது போல...
வெற்றி மனத்திருப்தியைக் கொடுக்கும்!!
ஆனால் தோல்வி
மன உறுதியைக் கொடுக்கும்!!
தோல்வியென்னும்
அக்னிக்குள் வெந்து
வெற்றியென்னும்
அன்னத்தை உண்!!

இரா.தீபா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## நட்பு

மனித வாழ்வில் மலரட்டும் நட்பு
என்றும் பிரியாத பெருஞ்சொத்து நட்பு
புனிதமான உள்ளத்தில் இருப்பது நட்பு
பூசல் எனும் குணம் இல்லாதது நட்பு
நட்பின் நிறம் வெண்மை
நட்பின் குணம் உண்மை
மக்களின் சங்கிலி உறவே நட்பு
உலகத்தின் சமாதான புறாவே நட்பு...

இரா.சே.தேவ்ஸ்ரீ
இளங்கலைஆங்கிலம் முதலாமாண்டு

# மாணவர் வாழ்வில் ஆசிரியர்

முதன் முதலாய் பள்ளி வாசலில்
கண்களில் கண்ணீரோடு - நான்
ஆசையாய் என்னை அள்ளி
சுவாசப்படுத்தினாய்
அந்த நொடி அம்மாவிற்கு
இணையாய் வந்தாய்...
அரும்பிலிருந்து
குறும்பு வயதிற்குத் தாவ
விடலைப் பருவம் துளிர்விட்டது
குறும்புக்கு குறை வைக்கவில்லை நான்!!
முட்டி போட வைத்து தண்டித்தாய் நீ
அந்த நொடி
தவறு செய்யவிடாமல் தடுத்து
தந்தைக்கு இணையாய் வந்தாய்!!
தோல்வியில் நான் துவழ
தோளில் சாய்ந்து எனைத் தேற்ற..
தோழனாய் வந்தாய்!!
என் வாழ்க்கையை வடிவமாக்கும் போது
சிலையைச் செதுக்கும் சிற்பியாய் வந்தாய்!!
வகுப்பின் கடைசி இருக்கையில் நான்...
தங்கள் தாலாட்டில்
இருக்கை படுக்கையானது...
எனக்கோ ஆழ்ந்த உறக்கம்,

சட்டென இடி முழக்கம்
விழித்தால்தான் தெரிந்தது
என் எதிரே அர்ச்சனைகள் ஆரம்பமென
அன்று எதிரியாய் வந்தாய்!! நீ
மாணவன் வாழ்வில்...
ஆசிரியர்...

சி.வினிதா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## காதல்

நதியில் விழுந்த இலையும்
காதலில் விழுந்த மனமும்
ஒன்றுதான்...
இரண்டுமே கரைசேரும் வரை
தத்தளித்துக் கொண்டே இருக்கும்...

தங்கேஸ்வரி
இளங்கலை ஆங்கிலம் முதலாமாண்டு

## முதற் வணக்கம்

என்னை இவ்வுலகத்தில் காண
பத்து மாதம் வயிற்றில் சுமந்து!
ஆணா! பெண்ணா.. அழகா! அழகில்லையா!
என்று தெரியாமல் வயிற்றில்

உதைத்த உதையைக் கூட
சுகமாக தாங்கிக் கொண்டு
பெற்று எடுத்த என் தாய்க்குப்
பாதத்தைத் தொட்டு
முதற் வணக்கத்தைச் சமர்ப்பிக்கிறேன்!

சு.கோகுல் குமார்
இளங்கலைஆங்கிலம் முதலாமாண்டு

## தாய்

கோவிலிலுள்ள சிலைகள்
யாவும் அசையாதிருக்க
ஒரு சிலை மட்டும் அசைகிறது
என் தாய் கோவிலைச்
சுற்றுகிறாள்...

சு.கோகுல் குமார்
இளங்கலை ஆங்கிலம் முதலாமாண்டு

## தவறு இது தவறு

இறைவனிடம் இன்பம் மட்டுமே
வேண்டுவது தவறு
இயற்கைத் தாயின் கர்ப்பத்திற்கு
கல்லறைக் கட்டுவது தவறு
ஆணிற்கு பெண்ணை
அடிமையாக்குவது தவறு

அன்னையின் அன்பிற்கு
விலை பேசுவது தவறு
விருப்பமில்லா ஆணிடம்
வேட்கை கொள்வது தவறு
ஐந்து அறிவு ஜீவன்களுக்கு
அன்பு காட்டாமல் இருப்பது தவறு
புலவனின் மனதை
புண்படுத்துவது தவறு
பாச நெஞ்சத்தை
பரிதவிக்கச் செய்வது தவறு
பசிக்கும் மனிதனுக்கு
பாதி உனவளிப்பது தவறு
தவறு எனத் தெரிந்தும்
தவறு புரியும் மனிதனே தவறு...

கோ.தமிழ்ச்செல்வி
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## அம்மா

அம்மா
பரம்பொருள் என்றோம்,
அவ்வடிவின் நிழல்
அவள் உருவென்றோம்...
மெய்ப்பொருள் என்றோம்.
அம் மெய்யின் ஒலி
அவள் மொழி என்றோம் !

உன் உடலில்
உயிர் ஊற்றி,
உயிர்ப்பித்தவளுக்கு
உருவமானாய் - நீ
வாழும் தேவதை என்பார்.
வணங்கும் தெய்வம் என்பார்...
அம்மா!
நீ உவமைக்கு அப்பாற்பட்டவள்,
என் உணர்வில் நிறைந்தவள்!
அம்மா! அவளே என் முகவரி...
நம் பயணத்தின் முதல் வரி!
மடி ஒன்றில் என்னை
அன்பாய் ஏந்தினாய்...
மாதங்கள் பல என்னை
நீரில் தாங்கினாய்...
வலி வர ஏனோ
வேண்டினாய்?
உன் அழுகையில்
நான் மலர்ந்தேனே!
பின்...
என் அழுகையில்
நீ மலர்ந்தாயே!
தெய்வம் தொட்டு வணங்காத
பாதங்கள் உனதல்லவா!

அய்யன் வீட்டு குலசாமியின்
காட்சிப் பொருளும்
நீ அல்லவா!!

தி.பிருந்தாவதி,
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு.

## வாழ்க்கை தத்துவம்

இயற்கை உனக்கு ஏராளமான
சோதனைகளைத் தந்திருக்கும்.
இயற்கைக்குத் தெரியும்
அந்த சோதனைகளை
உன்னால் மட்டுமே
முறியடிக்க முடியுமென
உனக்கும் தெரியுமா?
முயன்று பார்
முடியாது என்று எதுவுமில்லை!

மதி. வெ
முதலாமாண்டு கணினி பயன்பாட்டியல்

## நோக்கம்

மற்றவர்களை வீழ்த்துவது
நமது வாழ்க்கையின்
நோக்கமாக இருக்கக் கூடாது
நாமும் முன்னேறி

மற்றவர்களையும்
முன்னேற்றுவது தான்
நமது வாழ்க்கையின்
நோக்கமாக
இருக்க வேண்டும்.

மதி. வெ
முதலாமாண்டு கணினி பயன்பாட்டியல்

## ஆசிரியர்

என் தாயின் கருவறையிலோ
பத்து மாதங்கள் இருந்தேன்...
ஆனால் இப்பள்ளியிலோ நான்
144 மாதங்கள் இருந்துள்ளேன்...
அந்நாட்களில் நான் சந்தித்தவர்களோ அதிகம்
அவர்கள் என் சொந்தமோ பந்தமோ இல்லை
அவர்கள் என்னை உருவாக்கியவர்கள்
இவ்வுலகைக் காட்டியவர்கள்
என் திறமையை அறியச் செய்தவர்கள்
அதனை வெளிப்படுத்தவும் தூண்டியவர்கள்
அவர்கள் தான்
என் அன்புக்கும் பாசத்திற்கும் உரிய
என் ஆசிரியர்கள்!!!

கிருத்திகா.த
முதலாமாண்டு ஆங்கிலம்

# வாழ்க்கை விளையாட்டு

விளையாட்டுகள்
அனைத்தும் முடிந்த ஏகாந்த
வேளையில்...

மொட்டை மாடியில்
நிலவைப் பார்த்தபடி
என் வாக்கு வாதம்
தொடங்கியது
நிலவுக்கும் எனக்கும்...
யார் பெரிய 'அனாதை'
என்று...

நெருங்கிய உறவுகளும்
தூரம் தான் என்னில்,
என்றேன் நான்
உறவே
தூரம் தான் எனக்கு
என்றது நிலா...

சொந்தங்கள் கொழுத்திவிட்ட
வேதனைத் தீயின்
ஆழம் கண்டவன்
என்றேன் நான்...

சொந்தம் என்ற சொல்லின்
ஆழம் கூடக் கண்டதில்லை
என்றது - நிலவு

விவாதங்கள் இவ்வாறே தொடர...
காரணங்களின் தோரணை
துலாக்கோலில்
சமமாகவே நின்றது
தீர்ப்பினைக் கூற
மறுபடியும்
விளையாடலாமா?
என இருவரிடமும்
கடவுள் வினவ.,

சுவற்றில் எறிந்த
பந்தாய் 'வாழ்க்கை'
எங்களை நோக்கிவர
'விதியின்'
சிரிப்பொலியுடன்
தொடங்கியது
விளையாட்டு
மீண்டும்...

சோ.கோமதி
இரண்டாமாண்டு தமிழ் இலக்கியம்

## இது தான் உலகம

இது தான் உலகம்
வெளிச்சத்தைத் தேடினேன்
இருட்டுக் கிடைத்தது
வெற்றியைத் தேடினேன்
தோல்வி கிடைத்தது
இன்பத்தைத் தேடினேன்
துன்பம் கிடைத்தது - என்ன
உலகமென்று நினைத்தேன்
அப்போது தான் உணர்ந்தேன்
மூச்சு நின்றால் மட்டும்
மரணமில்லை - உன்னுடைய
முயற்சி நின்றாலும்
மரணம் தான் என்று - எனவே
தடங்கல்களைப் படிக்கற்களாக மாற்று
இந்த உலகில்
உன் முதல் அடியைப் பதிக்க...

வ.சரண், முதலாண்டு வணிகம் மற்றும் கணினி
பயன்பாட்டியல், ஆ பிரிவு

## அழகின் அழகு

மண்ணுக்கு மழை அழகு
மலையருவிக்கு வீழ்ச்சி அழகு
வீழ்ச்சிக்கு காடு அழகு

காட்டிற்குப் பசுமை அழகு
பசுமைக்குப் பூ அழகு
பூவிற்கு வண்ணம் அழகு
பெரியோர்க்கு பண்பு அழகு
பண்பிற்கு அறிவு அழகு
அறிவுக்கு வெளிப்பாடு அழகு
கவிஞனுக்கு கற்பனை அழகு
கற்பனைக்கு இசை அழகு
இசைக்கு ராகம் அழகு
இயலுக்கு நடை அழகு
நடைக்கு நடிப்பு அழகு
நடிப்புக்கு பாவம் அழகு
அழகுகள் கோடி உண்டு - ஆனால் எனக்கு
என் தாய்த் தமிழே - அழகு
என்றென்றும் தமிழே
நீ தான் எனக்கு அழகு!!!

மா.ரா.வே. ராஜேஸ்வரி
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

## பசுமையைப் பாதுகாப்போம்

பொழுதும் விடிஞ்சிடுச்சு
சேவக்கோழி கூவிடுச்சு
அதிகாலை ஆகிடுச்சு
பௌர்ணமி முகம் கொண்ட

பெண்டீரே எழும் அம்மா!
புறம் முதுகு காட்டாத
ஆடவரே எழும் அய்யா
ஏழு மணிக்குள்ள வயக்காடு மிதிக்கணுமே
வருங்கால சந்ததிக்கு
நெல்மணியும் சேர்க்கணுமே...

அதுகுள்ள
பால் வண்டி கட்டணுமே
மாடெல்லாம் வணங்கணுமே
பாதி கட்டுன பங்களாவ மொழுகணுமே

பழங்கஞ்சி கொஞ்சம்
போனியில் ஊத்துணுமே
ஊரெல்லாம் ஒண்ணுகூடி
வயக்காடு சென்றடையனுமே
சேத்துக்குள்ளே கால வச்சு
சோத்துக்கு சேர்க்கனுமே

கத்தரியும் விதைக்கனுமே
கத்தரி வெயிலோட
வெண்டையும் விதைக்கனுமே
வெள்ளாம காட்டோட
தென்னையெல்லாம் நடனுமே
நாத்தோரம் தெருவோரம்
இளப்பாற இடம் வேணும்
ஆலமர விழுதோடு

காலமெல்லாம் தங்குமய்யா
தண்டபாணி கோயிலோரம்
கொஞ்சம் நடுமய்யா

சொந்தமல்லாம் ஒண்ணு கூடி
சொர்க்கத்தில் வாழும் காலம்
வயக்காட்ட விட்டுப் புட்டா
வாழ்நாளில் கிடைக்குமாயா?

வண்டியில மாடுகட்டி
வடையெல்லாம் சுட்டுகிட்டு
வாளியில சோறுகட்டி
ஆத்தோரம் போவோமய்யா
பொழுதுபோக்க
போன நேரம் பாத்து
மண்சாலை வேணாமுன்னு
ஒரு மடையன் தர்க்கம் பன்ன
தார்சாலை போட சர்கார்கிட்ட முறையிட்டோம்

முழுகி போயிடுச்சு
மூவுலகம் மாறிடுச்சு
முக்கால் பாகம் படிச்சதால
விஞ்ஞானம் வளர்ந்திடுச்சு
விந்தையா மாறிடுச்சு

விதையும் கலப்பினம் ஆயிடுச்சு
மனசும் கலங்கிப் போயிடுச்சு

விஞ்ஞானம் வளர்ந்ததால் எல்லாம்
நெகிழியில வந்திடுச்சு

வயலும் நெகிழியில வரப்போகுதாம்
இயற்கை வரம் எல்லாம்
வந்து கதறுதய்யா...
கருப்பையா, கருத்தம்மா
கருத்து ஒண்ணு கேட்டுகோங்க
நெகிழியில வயலை நினைச்சா
நெஞ்சு வெடிக்குதய்யா...

கொஞ்சம் நாத்து கண்ணு
வாங்கி வை
நா சொர்க்கம் தேடி போறன்
சொக்கநாதங்கிட்ட சேதி சொல்லி
சொட்டு மழையேனும் அனுப்பி வைக்க...

வயக்காட்ட உழுது போடு
வருணன் கிட்ட வேண்டி
வண்டி தண்ணியேதும்
அனுப்பி வைக்க
விதையெடுத்து விதைச்சு விடு
வயக்காட்டோடு..
வாரிசு மனசோட..,
இனியேனும்...
விளையட்டும் பயிருமய்யா

வளரட்டும் மரமுமய்யா

நிறையட்டும் பசுமையம்மா...

முதுநிலை அறிவியல், இயற்பியல்

## விரதம்

விரதம்

உனக்குத் தெரியாது

நான் உளியின் வலிகளைப்

பொறுத்துக் கொள்வதெல்லாம்

சிற்பமாவதற்கு

என்பது...

அ.கோகிலா

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## மழை

மழை என்னும் நடன இயக்குநர் நடனமாட

குயில் என்னும் பாடகி பாட,

இடி என்னும் இசையமைப்பாளர் இசைக்க

ஒளி என்னும் ஒளிப்பதிவாளர் ஒளிக்க

காற்று என்னும் நாயகன் சீறிப்பாய

நிலா என்னும் நாயகி வெட்கத்தோடு மறைய

மழை என்னும் சில நிமிட குறும்படத்திற்கு

வானவில் என்னும் பொன்னாடை அணிவித்தோம்.

வே.ராகினி

இளம் அறிவியல் இரண்டாமாண்டு- நுண்ணுயிரியல்.

# பெண்மையைப் போற்றுவோம்

பரந்த இப்பாரினில்
பேசும் அழகுப் பாவை அவள்
நிறைந்த இவ்வுலகினிலே
நிலையான தேவதை அவள்
பரந்த இப்புவி வளம்பெற
இறைவன் தந்த மா வரம் அவள்
வயிற்றில் நம்மை ஏந்தியே
வலிகள் பல சுமப்பவள்
பயிற்சி ஏதும் இன்றியே
பக்குவமாய் நம்மை வளர்ப்பவள்
நம் உயிரை சுமக்கும்
தாயை
உலகை படைக்கும்
தெய்வத்தை
பயிரை அழிக்கும் களைபோல்
நரகம் செய்வது ஏனோ?

கயிறைக்கட்டி வீட்டிலே
கதவடைப்பது ஏனோ?
பெண்கள் அறிவில்
சிறந்தவர்களன்றோ
வீணாய்
கல்வியில் அவர்களை
விலக்கி வைப்பது நன்றோ
விறகு உடைக்கும்
பெண்களாய் வளர்ந்துவிட்டனர்.

முடங்கிக் கிடந்த
பெண்களிடையே
முன்னேறிய பெண்கள் பலர்
அவர்களை ஊக்கப்படுத்தாவிட்டாலும்
பரவாயில்லை
உருக்குலைக்காமல்
இருந்தாலே போதும்!

மதிக்காவிட்டாலும்
பரவாயில்லை.
மதிப்பவரைத் தடுக்காமல்
இருந்தாலே போதும்
பெண்மையைப் போற்றுவோம்.

கோ.அபிநயா, இளம் அறிவியல்
உயிர்தொழில் நுட்பவியல் முதலாம் ஆண்டு

## *கார்கில் வெற்றி தினம்*

உலகிற்கே பஞ்சசீலக் கொள்கையை அளித்த அமைதியான நாடு இந்தியா. இன்றும் எப்போதுமே சமாதானத்தை விரும்பும் நாடாகவே இந்தியா இருந்து வந்துள்ளது. எனினும் இந்திய சுதந்திரத்துக்குப் பின்னர் நமது அண்டை நாடுகளான பாகிஸ்தானும், சீனாவும் நம்மைச் சீண்டி தொல்லைக்கு ஆளாக்கிய பிறகே நாம் ஆயுதம் ஏந்த வேண்டியிருந்தது.

1999-ம் ஆண்டு மே வாஜ்பாய் ஆட்சியில் இந்திய ராணுவத்தை பாகிஸ்தான் ராணுவம் எரிச்சல் படுத்தியது. ஆம்

பாகிஸ்தானில் அரசியல் குழப்பங்கள் உண்டாகும் பொழுதெல்லாம் அது இந்தியாவை வம்புக்கு இழுக்கப் பார்க்கும். அப்படித்தான் 1999-ம் ஆண்டு இந்தியாவுக்குச் சொந்தமான கார்கில் மலைப்பகுதியை பாகிஸ்தான் ராணுவம் சொந்தம் கொண்டாடத் தொடங்கியது. மே மாத வாக்கில் பாகிஸ்தான் இராணுவமும் காஷ்மீரி போராளிகளும் பாகிஸ்தானிலிருந்து கட்டுப்பாட்டுக் கோட்டைத் தாண்டி இந்தியாவிற்குள் நுழையச் செய்தனர். அது முறியடிக்கப்பட்ட கார்கில் தினம் இன்று.

மே மாதம் 3-ம் நாள் இந்தியாவின் கார்கிலில் பாகிஸ்தான் ஊடுருவியிருப்பது இந்திய ராணுவத்தால் கண்டறியப்பட்டது. இதனால் இந்திய ராணுவம் காஷ்மீர் பள்ளத்தாக்கிலிருந்து தனது படைகளை கார்கில் பகுதிக்கு அனுப்பியது. ஜுன் 6-ம் தேதி இந்திய இராணுவம் கார்கிலில் பெரும் தாக்குதலைத் தொடங்கியது. ஆரம்பத்தில் இந்த ஆக்கிரமிப்பை காஷ்மீர் தீவிரவாதிகள் மீது பழி சொல்லி தப்பித்த பாகிஸ்தான் இப்போது நேரடியாக இந்திய தாக்குதலை நேர்கொள்ள வேண்டி வந்தது. ஜுன் 15 ஆம் நாள் முன்னாள் அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் அப்போதைய பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீ∴பைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கார்கிலில் இருந்து படைகளைத் திரும்பப் பெறுமாறு கேட்டும் பாகிஸ்தான் மறுத்துவிட்டது. இதனால் இந்திய இராணுவம் கார்கிலில் தனது மும்முனைத் தாக்குதலைத் தீவிரமாக்கியது. பாகிஸ்தான் ராணுவம் தோல்வியடைந்து தனது நாட்டுக்கு பின்வாங்கி விட்டது.

நமது நாடு வெற்றி பெற்றது.

ஷ.சையத் மூசா உமர்

I .B.Sc CS

# பொது அறிவு

1. ஹம்பியின் பாழடைந்த சின்னங்கள் எக்கால சின்னங்களாக உள்ளன?

   விடை : விஜயநகரப் பேரரசு

2. ----- என்பவருடைய ராணுவ நடவடிக்கை அலகாபாத் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது?

   விடை : சமுத்திர குப்தா

3. கல்லில் வடித்த காவியம் என்று அழைக்கப்படுவது?

   விடை : மோதி மசூதி

4. இந்தியாவில் ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட முதல் கோட்டை?

   விடை : செயிண்ட் ஜார்ஜ் கோட்டை

5. சாரநாத் கல்தூணில் செதுக்கப்படாத விலங்கு?

   விடை : மாடு

6. முகலாயர் கால ஓவியக் கலைக்கு வித்திட்டவர்?

   விடை: ஹுமாயூன்

7. கஜுராஹோ என்ற இடம் அமைந்துள்ள மாநிலம்?

   விடை : மத்திய பிரதேசம்

8. சூரியக் கடவுளுக்கான கோவில் உள்ள இடம்

   விடை : கொனார்க்

9. கோவில் நகரம் என்று எதனைக் குறிப்பிடுவர்

   விடை : ஹய் ஹோல்

10. துக்ளக் கட்டிடக் கலையின் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சம்?

    விடை : அழகிய வளைவுகள்

ஜித்தேந்திர ராஜன்.கு
முதலாமாண்டு கணினி பயன்பாட்டியல்

## பொது அறிவு

1. இந்தியாவின் முதல் சோதனைக் குழாய் குழந்தை யார்?

   விடை : இந்திரா

2. இந்தியாவின் முதல் பெண் விமானி யார்?

   விடை : துர்கா பானர்ஜி

3. இந்தியாவின் முதல் திரைப்படம் எது?

   விடை : ராஜா ஹரிச்சந்திரா

4. இந்தியாவின் முதல் செய்தித்தாள் எது?

   விடை : பெங்கால் கெசட்(ஜனவரி 27,1780)

5. தமிழ்நாட்டில் உள்ள தாலுக்காக்களின் எண்ணிக்கை என்ன?

   விடை : 206

6. மேட்டுர் அணையின் கொள்ளளவு?

   விடை : 93.50 டி.எம்.சி

7. இரயில் பாதைகள் எத்தனை வகைப்படும்?

   விடை : 3

8. இந்தியன் இரயில்வேயின் பறக்கும் ராணி யார்?

   விடை : மும்பயிலிருந்து சூரத் செல்லும் ரயில்

பவித்ரா.மா

முதலாமாண்டு ஆங்கிலம்

## விடுகதைகள்

1. அறிவின் மறுபெயர்.. இரவில் வருவது.. அது எது?

   விடை : மதி

2. எட்டாத ராணியாம், இரவில் வருவாள் பகலில் மறைவாள் - யார்?

விடை : நிலா

3. ஒற்றைக் கால் குள்ளனுக்கு எட்டு கைகள் ?

விடை : குடை

4. மண்ணுக்குள்ள வெள்ளிக்கட்டி?

விடை : முள்ளங்கி

5. மரத்திற்கு மேலே பழம் , பழத்திற்கு மேலே மரம், அது என்ன?

விடை : அன்னாச்சிப்பழம்

6. கண்டு பூ பூக்கும், காணாமல் காய் காய்க்கும் - எது?

விடை : வேர்க்கடலை

7. மண்ணுக்குள் கிடப்பவன் மங்களகரமானவன் - யார்?

விடை : மஞ்சள்

8. எங்க அக்கா சிவப்பு, குளித்தால் கருப்பு?

விடை : அடுப்புக்கறி

9. ஆடும் வரை ஆட்டம் ஆடிய பின் ஓட்டம்- எது?

விடை : இதயம்

10. கொம்பு நிறைய கம்பு?

விடை : மாதுளம்பழம்

11. பச்சையாய் விரிச்சிருக்கு.. பருவம் கழிந்தால் மணிகள் குவியும்- எது?

விடை : நெற்கதிர்

ச. புவியரசு

முதலாண்டு ஆங்கிலம்

# தமிழ்நாடு

1. தலைநகரம் : சென்னை
2. மாவட்டங்கள் : 32
3. மாநகராட்சிகள் : 12
4. மாநிலச் சின்னம் : ஸ்ரீ வில்லிப்புத்தூர் கோவில் கோபுரம்
5. மாநில முத்திரை சொல் : வாய்மையே வெல்லும்
6. மாநில விலங்கு : நீலகிரி வரையாடு
7. மாநில பறவை : மரகதப்புறா
8. மாநில மரம் : பனைமரம்
9. மாநில கனி : பலா
10. மாநில மலர் : செங்காந்தள்
11. மாநில மொழி : தமிழ்
12. மாநில வாழ்த்து : நீராருங் கடலுடுத்த - தமிழ் தாய் வாழ்த்து
13. மாநில நடனம் : பரத நாட்டியம்
14. மாநில விளையாட்டு : கபாடி
15. பரப்பளவு : 11 - வது பெரிய மாநிலம்
16. மக்கள் தொகை : 7 - வது இடம்
17. எழுத்தறிவில் : 8- வது இடம்
18. ஆண் பெண் விகிதம் : 1000 : 995
19. மிகப்பெரிய மாவட்டம் : விழுப்புரம்
20. மிகச்சிறிய மாவட்டம் : சென்னை
21. அதிக மக்கள் தொகை : சென்னை

22. குறைந்த மக்கள் தொகை : பெரம்பலூர்

23. அதிக மக்கள் நெருக்கம் : சென்னை

24. குறைந்த மக்கள் நெருக்கம் : நீலகிரி

25. அதிக கல்வியறிவு : கன்னியாகுமரி

26. குறைந்த கல்வியறிவு : தருமபுரி

27. அதிக பாலின விகிதம் : நீலகிரி

28. குறைந்த பாலின விகிதம் : தருமபுரி

தொகுப்பு - சோ.கோமதி

இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

## *சிறுகதை - குரலால் வந்த வினை*

காட்டில் ஒரு கழுதைக்கு இறந்த ஒரு சிங்கத்தின் தோல் கிடைத்தது. உடனே அந்தக் கழுதைக்கு ஒரு யோசனை தோன்றியது. அதாவது, சிங்கத்தின் தோலைப் போர்த்திக் கொண்டு, மற்ற விலங்குகளை அச்சமூட்ட வேண்டும் என்பதே அது. சிங்கத்தின் தோலை போர்த்துக் கொண்ட கழுதை காட்டில் திரிந்தது. அதைக் கண்ட மற்ற விலங்குகள் அஞ்சி ஓடின. தன் உருவத்தைக் கண்டு, மற்ற விலங்குகள் அஞ்சி ஓடுவதைக் கண்ட கழுதை மகிழ்ச்சியில் கத்தத் தொடங்கியது. அவ்வளவுதான். இதுவரை சிங்கம் என்று கழுதையை நினைத்த விலங்குகள் திரும்பிப் பார்த்தன. தங்களை இவ்வளவு நேரம் ஏமாற்றியது கழுதை தான் என்று அவை புரிந்து கொண்டன. அவையெல்லாம் சேர்ந்து, தங்களை ஏமாற்றிய கழுதையை உதைத்து விரட்டின.

**நீதி:** சிறியவெற்றியில் தலைகால் புரியாமல் ஆடினால், பிறகு ஆபத்துத்தான் விளையும்.

ஈ.தாரணி

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## மழை

வானத்தின் துன்ப இன்பத்தின்
வெளிப்பாடாய்
வானம் நிகழ்த்தும் மாயமாய்
மேகத்தின் செல்வமாய்
சிப்பிக்குள் விழுந்த முத்தாய்!
மக்களின் தேவையாய்
குழந்தையின் ஆசையாய்
மழை! மழை! மழை!
ஆயிரம் கரங்கள் ஏங்குகின்றன...
நீ வருவாய் என
மலர்கள் காத்துக்கொண்டு இருக்கின்றன...
உன் வருகையை நோக்கி
நீ இல்லை என்றால்
நாடெங்கும் பஞ்சம்
நீயே பூமியின் புன்னகை சின்னம்
சாரல் மழையே வா
என்னோடு கைகோர்த்து ஆட !

மோ.சோனியா

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

# வகுப்பறை

வகுப்பறை நமக்கென
வகுக்கப்பட்ட அழகிய
கோவிலறை...

வகுப்பறை
மழலைப் பருவத்தில்
தத்தித் தவழ்ந்து,
மெதுவாக நடந்து
பேசிய வயதில்
கண்டேன் ஒரு அழகிய
வகுப்பறையை!!!

காலங்கள் கடந்தன
எனது வயது முதிர்ச்சி
அடைய,
எனக்கு புதிய
உணர்வுகள் உண்டாகும்
வயதில் கண்டேன்

என் கவலைகளைக் கொட்டித்
தீர்க்க கிடைத்த
வகுப்பறையும்...
வகுப்பறை நண்பர்களையும்
எத்திசைகளிலோ இருந்து
வந்த எங்களை ஒரு

அறையில் அமர்த்தி
எங்களை அறிமுகப்படுத்திக்
கொண்டு
பழகிக் கொண்டு
இன்பமாக வாழ்கின்றோம்!!

எனது அழகிய கல்லூரி
வகுப்பறையில்,
இன்பங்கள், துன்பங்கள்
அனைத்தையும் அனுபவித்த
ஒரே அறை
வகுப்பறை

சி.வினிதா
இளங்கலைத்தமிழ் மூன்றாமாண்டு

